**எஸ்.டி.சி.எண்.2662/2023 நாள்– 29.01.2026 பக்கம் 173/2023**

**ம.சா .1.சண்முகம் த/பெ.கந்தசாமி**

**எதிரி ஆஜர்.**

**M.P 08/2024 கடந்த 22.03.2024 அன்று மனு அனுமதிக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.**

**1)** நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கை தவிர எத்தனை வழக்குகள் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 ,3 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்குகள் அனைத்தும் காசோலை சம்பந்தமான வழக்குகள் என்றால் சரிதான். எனது மனைவி மக்கள் சேலத்தில் குடியிருந்து வருகின்றார்களா என்றால் இல்லை. நான் சேலத்தில் ரூம் எடுத்து தங்கியுள்ளேன். தேவைப்படும் நபர்களுக்கு பணம் கொடுப்பேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் அறிவிப்பு, மனு, மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் எனக்கும், எதிரிக்கும் வரவு செலவு ஏதேனும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எதிரியின் மனைவி பெயர் ரேணுகா தேவி. அவர் சேலை வியாபாரம் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகின்றார் என்றால் சரிதான். எதிரியோட மனைவி எனக்கு சுமார் 10 வருடங்களாக பழக்கம் என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் கடன் கொடுத்து திருப்பி தரவேண்டிய வட்டியோ, அசலோ திருப்பி செலுத்தவில்லை என்றால் அவர்களுக்கு மீண்டும் கடன் கொடுக்கமாட்டோம் என்றால் சரிதான்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

2) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிலோ, மற்றும் புகார்மனுவிலோ பணம் எப்படி கொடுத்தேன் என்றும், பணம் ரொக்கமாகவோ அல்லது வங்கிக்கணக்கு மூலமாகவோ கொடுத்தேன் என்றும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவி 2017 ல் பையனின் கல்விச்செலவுக்காக பணம் ரூ.1 ½ லட்சம் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. அந்த பணத்தை டிசம்பர் மாதம் 2020 திருப்பி தந்தார் என்றால் ஞாபகமில்லை. அவர் மீது ஒரு வழக்கு உள்ளது. திருப்பி தரவில்லை. அந்த 1 ½ லட்ச பணத்தை நான் வீட்டில் வாங்கினேன் என்றால் இல்லை. தொகை ஞாபகமில்லை. எதிரிக்கும் எனக்கும் எந்தகாலகட்டத்திலும் வரவு செலவு இல்லை என்றாலும், எதிரியின் மனைவிக்கும் எனக்கும் தான் வரவு செலவு உள்ளது என்றாலும், அதன் அடிப்படையில் கடந்த 2017 ல் எதிரியின் மகனின் கல்விச்செலவிற்காக, எதிரியின் மனைவியால் என்னிடமிருந்து பெறப்பட்ட கடன்தொகைக்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலை நிரப்பப்படாமல் கையெழுத்து மட்டும் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி பெற்ற கடன் தொகையை எதிரியின் மனைவியால் கடந்த 2020 டிசம்பர் முதல் வாரத்தில் திருப்பி செலுத்தப்பட்டது என்றாலும், நான் இந்த வழக்கு காசோலையை மறுநாள் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னதன் பேரிலும், என்மீது உள்ள நம்பிக்கையின் பேரிலும், இந்த வழக்கு காசோலையை திரும்ப பெறவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் மனைவி ரேணுகாதேவி மீது நான் கரூர் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் O.S. 550/2022 என்ற கடன் உறுதிச்சீட்டை ரூ.3 லட்சம் கடன் தொகை மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்

3) என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் O.S. 550/2022 வழக்கு நகல் என்றால் சரிதான். **O.S. 550/2022 பிராது சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்புதான் நான் எதிரியின் மனைவிக்கு 10.12.2020ம் தேதியன்று அனுப்பியது என்றால் சரிதான். **அந்த வழக்கறிஞர் அறிப்பு எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் எதிரியின் மனைவி கடன் வாங்கியதாக சொல்லப்படும் தேதி 10.01.2020. தொகை ரூ.3 லட்சம் என்றால் சரிதான். மேற்படி வழக்கு தாக்கல் செய்துள்ள மனுவில் எதிரியின் மனைவி வட்டி மற்றும் அசல் திருப்பி செலுத்தவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலைக்காக கடன் கொடுக்கப்பட்ட தேதி என்ன என்றால் 10.02.2021 ஆகும். இந்த வழக்கில் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு 3 மாதத்திற்கு முன்பு மனைவி வாங்கிய பணம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பேனாவின் மையின் நிற வேறுபாடு தெரியுமா என்றால் தெரியும். ம.சா.ஆ.1ல் உள்ள தேதி, தொகை மற்றும் பெயர் ஆகியவற்றில் உள்ள எழுத்துக்களின் மை லேசாகவும், கையெழுத்தில் உள்ள மை டார்க் ஆகவும் உள்ளது என்றால் சரிதான். நான் சேலத்தில் எத்தனை நாள் தங்குவேன் என்றால் வாரத்தில் 2 அல்லது 3 நாள்கள் தங்குவேன். எதிரியின் மனைவியும் சேலத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பணம் கொடுக்கல் வாங்கல் அனைத்தும் சேலத்தில் நடந்ததா என்றால் கரூரில் தான் பணம் வாங்கினார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்

4) நான் சேலத்திற்கு வார இறுதியில் சென்று பணம் கொடுத்தவர்களிடம், வார வட்டிவிகிதப்படி வசூல் செய்வேன் என்றாலும் எனக்கு அதுதான் பிரதான தொழில் என்றாலும் சரியல்ல. நான் தினமும் தாக்காபட்டி டிசன் வேர்டு கடையில் வட்டி வசூல் செய்வேன் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி கரூரில் உள்ள வீட்டிற்கு ஒருநாளும் வந்தது கிடையாது, கரூரில் உள்ள வீடு எங்கு உள்ளது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பு எதிரிக்கு சார்பு செய்யப்பட்டதா என்றால் முதல் நாள் **"Refused"** என்ற காரணம் குறிப்பிட்டும் மறுநாள் **"Door lock"** என்ற காரணம் குறிப்பிட்டும் திருப்பப்பட்டது. இந்த வழக்கிற்கு முன்பு அனுப்பப்பட்ட மேற்படி சட்டப்படியான அறிவிப்பு முறையாக எதிரிக்கு சார்பு செய்யப்படவில்லை என்று சொன்னாலும், எதிரி அதனை பெற்றுக்கொள்ள மறுக்கவில்லை என்று சொன்னாலும் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், அதனை மறைத்து எதிரியின் மனைவி வாங்கிய கடனுக்கு பொறுப்புக்காக கொடுக்கப்பட்ட இந்த வழக்கு காசோலையை பொய்யாக நானே நிரப்பி எதிரியின் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளது என்றாலும் எதிரி எந்தவொரு காலுத்திலும் கடன் பெற வில்லை என்றாலும், சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/−எம்.சார்லஸ் ஆல்பர்ட்
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்